# ஆண்டவர் உன்னை நேசிக்க அனுமதி

DR. CARL H. STEVENS

# ஆண்டவர் உன்னை நேசிக்க அனுமதி

## முன்னுரை

இந்த உலகிலேயே வேறெந்த வல்லமையையும் விட நமக்கு ஆரோக்யமளிக்க வல்லது எது?

நமது சரீரம் ஆரோக்கியப்படுவதற்கான ஒவ்வொன்றையும் நாம் செய்கிறோம்.

நாம் ஆரோக்கியப்பட வேண்டும் என்பதற்காகவே ஒவ்வொன்றையும் செய்கிறோம்.

ஆனால், ஆரோக்கியமளிக்கவல்ல மிகப்பெரிய வல்லமையைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளோம்.

நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் முதன்மையானதாக இருப்பது என்னவென்றால் ‘‘நாம் கடவுளால் நேசிக்கப்படவேண்டும்’’ - என்பது தான்.

உங்களது இரண்டாவது தேவை எது தெரியுமா? ‘கடவுளால் நேசிக்கப்படுவதுதான்’ - என்று நான் உங்களுக்குச் சொல்வேன்.

உங்களது மூன்றாவது தேவையும், ‘நீங்கள் கடவுளால் நேசிக்கப்படவேண்டும்’ என்பதுதான்.

நான் சொல்வது தெளிவாக இருக்கிறதா?

“நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதாலே அன்பு உண்டாயிருக்கிறது. (1 யோவான் 4:10) நீ தெரிந்துகொள்ளும் படியாக நான் விரும்புவது – ஆண்டவருடைய அன்பு இங்கு தொடக்கத்திலிருந்தே இருக்கிறது என்பதுதான். ஆதலால் எந்தவிதமான குணமாக்குதலுக்கும் முதன்மையான தேவை, உள்ளது உள்ளபடியே நீ இருக்கும் நிலையிலேயே ஆண்டவரால் நேசிக்கப்படுவது தான். ஆண்டவர் நம்மை நாம் இருக்கும் அந்த நிலையிலேயே நேசிக்கிறார்; தொடர்ந்து நம்மை அதே நிலையிலேயே நேசித்து வருகிறார். மேலும் ஆண்டவருடைய அன்பு நம்மிடம் மாற்றத்தை நிர்ப்பந்திப்பதில்லை மாறாக மாற்றத்தை உண்டாக்குகிறது. இந்தப் பகுதிகளில் சொல்லப்பட்டுள்ளதை உன்னால் சரியாகப் புரிந்துகொள்ள முடியுமானால், ஆண்டவருடைய அன்பு மிகப்பெரிய மாற்றங்களை உன் சொந்த வாழ்க்கையில்; நட்பின் உறவுகளில்; திருமண உறவில், மற்றும் உன் குடும்பத்திலும் ஏற்படுத்தும்.

நாம் இன்னமும் பாவிகளாயிருக்கையில் : ரோமர் 5:6,7,8:(6): “அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.

நீதிமானுக்காக ஒருவர் மரிப்பது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்.



நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக மரித்ததின் மூலம், நம்மேல் உள்ள அவரது அன்பை வெளிப்படுத்தினார். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் - அவர் நம்மை நேசித்தது மட்டுமல்ல, நமக்காக அவர் உயிரையே கொடுத்தார். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். நாம் அதற்காக எதுவும் செய்யவில்லை. ஆண்டவர் நம்மை நேசிக்கும் படிக்கு நாம் மனந்திரும்பவில்லை. ஆண்டவர் நாம் மனந்திரும்பாத போதே நம்மை நேசிக்கிறார். இதன் மூலம் நாம் பாவத்திலேயே தொடர்ந்து வாழலாம் என்கிறேனா? இல்லை. நான் அப்படிச் சொல்லவில்லை. நான் சொல்வது, ஆண்டவரது அன்பு மாற்றத்தை உண்டாக்குகிறது; ஆனால் அதைக் கட்டாயப்படுத்துவதில்லை. நீ இருக்கும் நிலையிலேயே ஆண்டவரால் நேசிக்கப்படு. ஆண்டவரை நீயாக நேசிக்க முயற்சி செய்ய வேண்டாம். மற்றவர்களை நேசிக்க முயற்சி செய்யவும் வேண்டாம். அப்படிச் செய்ய நினைக்கும்போது தோல்வியடைவாய். ஆண்டவரால் நேசிக்கப்படு. உன்னைக் கைவிடாத அவருடைய அன்பைப் பெற்றுக்கொள். உன்னைக் குறித்து என்றும் மாறாத அன்பைப் பெற்றுக்கொள்.

ஆண்டவர் தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார் : செப்பனியா 3:17: “உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில்

இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர்; அவர் இரட்சிப்பார்; அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன் பேரில் கெம்பீரமாய்க் களி கூறுவார்'', – இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தைச் சிந்தி, சிலுவையிலே நம்முடைய பாவங்களுக்கான விலையைக் கொடுத்து மரித்தார். அவர் அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்குச் சென்றார். இதனால் இப்போது ஆண்டவர் நமக்காகத் தமது அன்பில் என்றென்றுமாக அமர்ந்திருப்பார். ஆகையால் ரோமர் 9:16:-ல் சொல்லியுள்ளபடி அவருடைய அன்பானது விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல – இரங்குகிற தேவனையே சார்ந்திருக்கிறது. யோவான் 1:12: சொல்லுகிறது'', அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். ''அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்''. (யாக்கோபு 1:18).

## சீர்கெட்ட உறவுகள் சீராக்கப்படுதல் :

நாம் நடைமுறையாகப் பார்க்கலாம், சீர்கெட்ட உறவை எப்படி சமாளிப்பது என்று, அதைப் பற்றிக் கவலைப்படுவதாலா? என்னை நானே குற்றவாளியாக்கிக் கொள்வதாலா? அதைப் பற்றிக் குற்றமாக உணர்வதாலா?



அதைப்பற்றி வேஷம் தரிப்பதாலா? இல்லை ஆண்டவருடைய வசனம் சத்தியமாகும் பொருட்டு உறவுகள் சீர்கெட்ட நிலையில் உள்ளபோது அவர் என்னை நேசிக்க அனுமதிக்கிறேன். நான் தோல்வியுற்றால் அவர் என்னை நேசிக்க அனுமதிக்கிறேன். எனக்கு மாறுவதற்குண்டான பெலன் இல்லை ஆதலால் ஆண்டவர் என்னை மாற்றுவதற்கு நான் அனுமதிக்கிறேன். அவருடைய அன்பு தோல்வியுறுமா? இல்லை. அது தோல்வியுறாது. அவர் மாறுவாரா? இல்லை அவர் மாறுவதில்லை.

நீ உள்ளது உள்ளபடி : சமீபத்தில் ஒரு நபர் என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டார். H.I.V. (ஹெச்.ஐ.வி.) எய்ட்ஸ் நோய்க்காகப் பரிசோதிக்கப் பட்டு, பாஸிடிவ் என்ற செய்தி வந்ததினால் அவர் மிகவும் துயரப்பட்டார் (மோசமான நிலையிலிருந்தார், பதினைந்து வருடக் காலத்திற்குள் அவர் தன் பெலவீனத்தின் காரணமாக மூன்று முறை தோல்வியுற்றிருந்தார். மூன்றாவது முறையின் போது) அவருக்கு H.I.V. வந்து விட்டதன் காரணமாக மரிக்க விரும்பினார். அவர் தன் மனைவியிடம் இது பற்றிச் சொல்லும் போது மிகவும் அவமானப் பட்டிருந்தார்.

அவர் என்ன செய்ய முடியும்? ஏற்கெனவே அவர் தன் செயலை மிகவும் வெறுத்தார். இப்போது இந்த மனிதரின் தேவை அவர் கடவுளை தன்னை நேசிக்க அனுமதிக்க

வேண்டும்; (H.I.V.-ஐப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் இருந்ததைப் போலவே).

கடவுளை நாம் நேசிக்க அனுமதிப்பதினால் சட்டத்திற்குப் புறம்பாக எதுவும் ஏற்படுவதில்லை. அதற்கு மாறாக அது நமக்குக் கற்றுத் தருவதெல்லாம் தேவனுக்குப் பிரியமில்லாதவற்றை எல்லாம் வெறுப்பதற்கும், தேவ வசனம் நம் இருதயத்தில் தங்கிருந்து நாம் அமைதியாக வாழ்வதற்கும் ஏதுவானதே.

மிக அழகான உன்னதமான காரியம் என்னவென்றால், நாம் தேவனை உள்ளது உள்ளபடி நேசிக்க அனுமதிப்பதே. இதை நான் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதின் ஒருகாரணம் — கடவுளை நாம் நேசிக்க அனுமதிப்பதின் மூலம் மட்டுமே நம் நினைவுகளையும், ஆத்துமாவையும் குணப்படுத்திக்கொள்ள முடியும். நம் சுயத்தையும், நம் குணத்தையும் மாற்றுவதற்குண்டான ஒரே வழி, நம்மை கடவுள் நேசிக்க அனுமதிப்பது ஒன்றே. சில மனிதர்கள் தங்கள் மனைவியை சரியாக நேசிக்க முடியாமற் போவதன் காரணம் அவர்கள் கடவுளால் தாங்கள் நேசிக்கப்படுவதைப் புரிந்துகொள்ளாததுதான்.

கடவுளது குமாரனின் சாயலுக்கு ஒப்பாகுதல். ரோமர் 8:28-30:28: ‘‘அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்’’.



‘‘தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டுத் தேவன் எவர்களை— முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்’’. ‘‘எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்’’.

ஆண்டவர் தமது முன்னறிவின் படியே, நான் என் சுய விருப்பத்தில் அவருடைய குமாரனை விசுவாசிப்பதைத் தெரிந்தெடுப்பதை அறிந்திருந்தார். ஆண்டவர் எப்போதும் எனக்காக இருப்பதால் நான் நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தப்படுத்தப்பட்டு, மகிமைப் படுத்தப்பட்டேன். என் பாவங்களுக்காக அவரது குமாரனால் கிரயம் செலுத்தப்பட்டதினால் ஆண்டவர் எனக்காக உள்ள தமது அன்பில் நிலைத்திருக்கிறார்.

மற்றொரு தேவாலயத்தைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டார். அவர் கூறியதாவது. ‘‘நான் உன்னை தாக்கியிருக்கிறேன், வெறுத்திருக்கிறேன், மேலும் தேவனிடமும் சண்டையிட்டிருக்கிறேன். என் 29-வது வயதில் நான் மரித்துக் கொண்டிருக்கும் தருவாயில், மனந்திரும்ப விருப்புகிறேன் என்று சொன்னார்’’. நான் சொன்னேன் — ‘‘உங்களைக் குறித்து என்னுடைய ஒரே ஒரு

அக்கறையாவது – ஆண்டவர் உங்களை நேசிப்பதை நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்பதே''.

அவர் சொன்னார், ''எனக்கு எய்ட்ஸ் நோய் வந்துள்ளது. நான் மரிக்கப்போகிறேன்''.

அதற்கு நான் மீண்டும், ''நீங்கள் உள்ள நிலையில் உள்ளபடியே ஆண்டவர் உங்களை நேசிப்பதை அனுமதியுங்கள்'' என்றேன்.

அவர் தவறு செய்துவிட்டார், ஆனாலும் அவரது ஒரே தேவை - ஆண்டவர் அவரை நேசிக்க அனுமதிப்பதே. நான் அவரைத் தினம் தினம் சந்தித்து, ஆண்டவர் உங்களை நேசிக்க அனுமதியுங்கள்'' என்பதையே சொல்லி வந்தேன். பன்னிரண்டு வாரங்களுக்குள்ளாக அந்த மனிதர் ஹாஸ்பிடலிலிருந்து வெளியேறி, அவர் முன்பு வெறுத்த அதே தேவாலயத்திற்குச் சென்று, ஞானஸ்னானமும் பெற்றார். ஆண்டவர் அவரை மாற்றி விட்டார். இப்போது இந்த மனிதரது எண்ணங்கள், உணர்வுகள், முடிவுகள் யாவுமே வேத வசனத்திற்கு ஒப்பானதாக வெளிப்படுத்தப்படுகின்றன. அவரது இதயம் மாற்றப்பட்டுள்ளது. பிறகு அவரது ஆன்மாவும் மாற்றப்பட்டுள்ளது. பிறகு அவரது மனம் மாற்றப்பட்டுள்ளது. இதன்பிறகு இதுநாள்வரை தான் சண்டையிட்டு வந்த அவரது மனைவியை அவர் நேசிக்கவும், பிறகு அவரது இரு மகள்களை நேசிக்கவும் ஆரம்பித்தார்.



அவர் தன் தேவாலயத்தை நேசிக்க ஆரம்பித்த போது இரட்சிக்கப் படாதவர்களையும் நேசிக்க ஆரம்பித்தார்.

இந்த மனிதரில் மிக முக்கியமானதாக இருந்த ஒரு அம்சம் என்னவென்றால், முதலில் இவர் தன்னையே நேசிக்கவில்லை. உள்ளுக்குள்ளாக அவரால் தன்னையே நேசிக்க முடியாததால் ஆண்டவர் தன்னை நேசிக்கக் கூடும் என்பதையே அவரால் நினைத்துக் கூடப்பார்க்க முடியவில்லை. சில வாரங்களுக்குப் பின் தேவாலயத்தில் தன் உடல் சுகமாக்கப்பட்டதைப் பற்றிய சாட்சிகொடுத்தார். ஆண்டவரின் அன்பே இதைச்செய்ய இயலும். ஆண்டவர் ஒரு மாற்றத்தைக் கட்டாயப் படுத்தவில்லை. ஆனால் அவரது அன்பின் மூலம் ஒரு மாற்றத்தை என்னில் உண்டு பண்ணுகிறார். என்னை நான் சோதனைக்குட் படுத்தாமல் மேன்மேலும் ஆண்டவர் என்னை நேசிக்க அனுமதிக்கும்போது. இன்னும் தோல்வியைப் பற்றிய பயமே இல்லாமல் ஆண்டவர் என்னை நேசிப்பதை அனுமதிக்க முடியும். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக நான் கசப்புணர்வும் கோபமும் இல்லாமல் ஆண்டவர் என்னை நேசிப்பதை அனுமதிக்கிறேனோ – அவ்வளவுக்கவ்வளவு என் வாழ்வில் உள்ள ஒவ்வொரு குறையும் குணப்படுத்தப்படுகின்றது. ஆண்டவரது மேன்மையான சித்தத்தின்படி நான் குணமாக்கப்படுகிறேன். அது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரியே. ஆண்டவரை என்னை நேசிக்க அனுமதிப்பதால், என் இருதயம், என் ஆத்துமா, என் உணர்வுகள் யாவும் குணமாக்கப்படுகின்றன.

## அன்பு புதிய புதிய ஆரம்பங்களை உருவாக்குகின்றது

ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுமி அவர் குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய பிரச்சனையான சூழ்நிலையைப் பற்றி போதகரான என்னிடம் சொல்ல வந்தாள். பெற்றோர்கள் வீட்டில் தங்கியதே இல்லை. யாராவது ஒருவர் வார இறுதியில் வீட்டிலேயே இருக்க மாட்டார்கள். எப்போதும் வீட்டில் சண்டையும் சச்சரவும்தான், குடிப்பழக்கம் அந்த வீட்டிலிருந்தது. அவள் என்னிடம் சொன்னாள் – ''எனக்கு வீட்டிற்குப் போகவே மிகவும் பயமாக இருக்கின்றது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நீங்கள் என் போதகராயிருக்கிறீர்கள். என் வீட்டிற்கு வருவீர்களா?'' என்று கேட்டாள். மிக அபூர்வமான முறையில் அந்தப்பெண் தன் தந்தையிடம், ''நீங்கள் அந்தப் போதகர் பேசுவதைக் கேட்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்'' என்றாள். எனவே நான் பேச ஆரம்பித்தேன். ''உங்களுக்குத் தெரியுமா? பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயசே கிறிஸ்துவுக்கு நான் இன்று ஒரு தேவ ஊழியக்காரனாக உங்களிடம் பேச வருவேன் என்பது தெரியும் என்பதை?'' - பிறகு நான் சொன்னேன் – ''ஐயா, இப்போது இந்த நேரத்தில் ஆண்டவர் உங்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை வார்த்தையில் சொல்லி விளக்க முடியுமானால் செய்வேன். அவருடைய அன்பை நான் என் வார்த்தைகளால் உங்களுக்கு விளக்க – அதை நீங்கள் விசுவாகிக்க முடியுமானால் இந்தக் குடும்பத்தில்



உள்ள அத்தனையும் மாறக்கூடும்''. அவர் அதற்கு அந்தக் குடும்பம் எந்த அளவுக்கு செயல்பாடே இல்லாமல் அழிவுக்கேதுவாக உள்ளது என்று சொன்னார், அது உண்மை என்றேன் நான். பிறகு, ''நீங்கள் முதலாவதாக ஆண்டவர் உங்களை எந்தவிதமான மறுப்பும் இன்றி நேசிக்க அனுமதிக்க வேண்டும்'', என்றேன். ''நான் உங்கள் குடிப்பழக்கத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கூடக்கேட்கப் போவதில்லை. ஆண்டவர் உங்களை நேசிக்க மட்டும் அனுமதியுங்கள்'' என்றேன். அவர் ஒரு குழந்தையைப் போல அங்கேயே அழ ஆரம்பித்தார்.

அன்று இரவு தேவாலயத்திற்குப் போன பின்பு நாங்கள் இருவருமாக வெளியே போனோம். அவர் இயேசுவை தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டார். அதன் பிறகு அவர் ஒரு முறை கூடக் குடிக்கவில்லை. அதன் பிறகு அவர் மனைவியும் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் யாவருமாக ஞானஸ்னானம் பெற்றார்கள். அந்தச்சிறுமியின் வாழ்வில் மிகப்பொன்னான மகிழ்ச்சியின் நாளாக அது அமைந்தது. அவர்கள் குடும்பத்துடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை என்னிடம் தந்தார்கள். ஆண்டவர் நம்மை நேசிக்க அனுமதிப்பதற்கு எத்தகைய மகத்தான சாட்சி!

## கடந்த காலத்தை மறத்தல் :

நான் அந்த வீட்டிற்குப் போனது, அந்தத் தந்தையின் நிலைமை எவ்வளவு மோசமாக உள்ளது என்று

விவாதிப்பதற்கு அல்ல. பாரம்பரியமாகவும், உணர்ச்சிப்பூர்வமாகவும், மனோதத்துவ ரீதியாகவும் அமைந்துள்ள எல்லாவிதமான காரணங்களையும் இந்த நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமாக நாங்கள் கண்டுபிடித்திருக்கக் கூடும். ஆனால் நான் அங்கு சென்றது — ‘‘ஆண்டவர் இந்த மனிதனைத் தன்னுடைய சாயலாகப் படைத்திருப்பதையும், இந்த நிலையில் அவர் இந்த மனிதர்மேல் எவ்வளவாக அன்பு கூர்ந்திருக்கிறார்’’ என்பதைச் சொல்லவே. அங்கு பாவங்களைப் பற்றிய பேச்சே இல்லை. நான் ஆண்டவரின் அன்பு அவருக்குள் மனந்திரும்புதலை உண்டாக்க அனுமதித்தேன். அந்தச் சிறுமியின் தந்தை மாற்றப்பட்டு, ஒரு புதிய ஆரம்பத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஆண்டவரின் அன்பு ஒரு புதிய சுயத்தோற்றத்தைக் கொடுத்தது.

ஆண்டவரின் அன்பு ஒரு புது விழிப்புணர்வைக் கொடுத்தது.

ஆண்டவரின் அன்பு விசுவாசத்தைக் கொடுத்தது.
ஆண்டவரின் அன்பு கருணையை வெளிப்படுத்தியது.
ஆண்டவரின் அன்பு நம்பிக்கையைக் கொடுத்தது.
ஆண்டவரின் அன்பு கிருபையை வெளிப்படுத்தியது.

இந்தப் பெற்றோர் அவரது அன்பைத் தங்களுக்காக என்று ஏற்றுக்கொண்டனர். அதை அவர்களுக்குள்ளாகக்



கிரியை செய்ய அனுமதித்தனர். ஆண்டவரின் அன்பு அவர்களுக்கு என்று பகிர்ந்தளிக்கப்பட்டது. அதுவே அவர்களது பங்காயிற்று. 1 கொரிந்தியர் 13:8:-ல் காணப்படும் வசனம் — ‘‘அன்பு என்றும் தோல்வியடையாது’’ - என்று காணப்படுவதில் என்ன ஆச்சரியம்?

## ஒளியினுள் கொண்டுவரப் படுதல்

மீகா 7:9: ‘‘நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன், அவர் எனக்காக வழக்காடி, என் நியாயத்தை விசாரிக்குமட்டும் அவருடைய கோபத்தைச் சுமப்பேன், அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டு வருவார், அவருடைய நீதியைப் பார்ப்பேன்’’. — மீகா தீர்க்கதரிசி இதை எழுதும் போது தான் மிகவும் கீழான நிலையில் இருப்பதை உணர்ந்தார். அவர் பாவம் செய்திருந்தாலும் அவரைக் குறித்ததான ஆண்டவரின் அன்பைப் புரிந்து கொண்டிருந்தார். அந்த சமயம் அங்கே ஆண்டவர் அவருடன் இருப்பதை அறிந்திருந்தார். மீகா ஆண்டவரது அன்பின் ஒளியினால் தாம் மீண்டு வருவோம் என்பதையும், தான் நிச்சயமாய்ப் பாவமன்னிப்பைப் பெறமுடியும் என்பதையும் அறிந்திருந்தார்.

ஆண்டவர் ‘‘நீங்கள் பாவியாக இருக்கும் நிலையிலேயே, பெலவீனப்பட்ட நிலையிலேயே உங்களை நேசிக்கிறார்’’ ஆண்டவரின் அன்பு இதற்கு உத்தரவாதம் தருகின்றது. நீங்கள்

பாவிகளாக இருக்கும்போதே உங்களை நீதிமானாக்குகிறது. (ரோமர் 4:5) நியாயப்பிரமாணமும், அதன் கிரியைகளும் இல்லாமலேயே உன்னை நீதிமானாக்குகிறது. (ரோமர் 4:6) அவரது அன்பினால் இயேசுவே உனக்கு நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார். (1 கொரிந்தியர் 1:31). ஆண்டவரது அன்பு உங்களுக்கு மீண்டும் நீங்கள் எந்தப் பாவத்திற்காகவும் குற்றம் சாட்டப்படமாட்டீர்கள் என்று உத்தரவாதமளிக்கின்றது. அப்படியே நீங்கள் மீண்டும் பாவம் செய்தாலும், அவரது அன்பானது, அந்த அன்பினிமித்தம் உங்களை ஒழுங்குபடுத்துமேயல்லாது, அன்பற்ற நிலை அல்ல என்றும் உறுதியளிக்கின்றது. இந்த ஒழுக்கம் வருவது பாதுகாக்கவும், கிறிஸ்துவின் சிந்தையைக் கொடுக்கவும், ஆசீர்வதிக்கவுமே வருகின்றது.

ஆண்டவரது அன்பில் ''ஆனால்'' என்பதற்கு இடமில்லை. எரேமியா 31:3: பூர்வகால முதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய், ஆம் – ''அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன், ஆதலால் காருண்யத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன்''.

ஆண்டவர் இதைச் சொன்னபோது இஸ்ரவேல் நாடு விக்கிரகங்களை வணங்கிக் கொண்டிருந்தது. அவர் ''நீ சரியாக நடந்து கொண்டால்தான் உன்னை நேசிப்பேன்'' என்று சொல்லவில்லை. அவர், ''நீ விக்கிரகங்களை வழிபடுவதை நிறுத்திவிட்டால் தான் உன்னை நேசிப்பேன்'' என்று



சொல்லவில்லை. ஆனால் ஆண்டவர் சொன்னது – ''நான் உன்னை அநாதி சிநேகத்தால் சிநேகித்தேன்'' என்பதே. நாம் மேற்கொள்ளும் உறவுகளில் எத்தனையோ நிபந்தனைகள் உண்டு, எத்தனையோ நிபந்தனைகள். அவை மனத்தளவிலும், உணர்ச்சிப்பூர்வமாகவும் உள்ள சுகம் கிடைப்பதைத் தடுக்கின்றன. சில சமயங்களில் மனோ தத்துவ சரீர சுகம் கிடைப்பதையும் தடுக்கின்றன. ஆனால் ஆண்டவர் ''நிபந்தனைகளுக்கு உட்பட்டு, உன்னை சிநேகிப்பேன்'' என்று சொல்லவில்லை. அவர் சொன்னது – ''நீ புறம்பாக இருந்தபோதும் உன்னை சிநேகித்தேன்'' என்பதே.

தந்தை தன் கெட்ட குமாரனை தூரதேசத்திலிருந்த போதும் அதற்கு முன் தன் வீட்டிலிருந்தபோது உள்ளபடியே நேசிக்கவில்லையா? ஆம், அவர் நேசித்தார். கெட்டகுமாரன் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்த போதும் தகப்பனாரின் அன்பு மாறவே இல்லை. அவருடைய அன்பு பொறுமையுடன் அவனுக்குக் கிருபையைத் தருவதற்காகக் காத்திருந்தது. அந்தக் கெட்டகுமாரன் தான் உள்ள அந்த நிலையிலேயே வீட்டிற்குத் திரும்பவேண்டும் என்று தீர்மானித்து சென்ற போது மன்னிப்பையும் பெற்று, சுத்திகரிக்கப்பட்டான். அவனுடைய தந்தை அவனுக்கு மோதிரம், உடை, பாதரட்சை ஆகிய யாவும் கொடுத்து வரவேற்பு விருந்தளித்தார். அவன் தான் இருந்த நிலையில் உள்ளது உள்ளபடியே வீடு திரும்பியதால் ஏற்றுக்கொள்ளப்பட்டான். வீட்டில் அவர்கள் கொழுத்த

கன்றினை அடித்து விருந்து அளித்து மகிழ்ந்தனர் (லூக்கா 15:11-24).

இன்று சமூகத்தில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் சிந்தித்துப் பாருங்கள். எல்லாப் பாவங்களின் விளைவுகளையும் நினைத்துப் பாருங்கள். எல்லாக் குடும்பங்களிலும், தனி மனிதர்களிடத்தும் உள்ள கொடிய, களங்கம் ஏற்படுத்தும் நிலையை எண்ணிப் பாருங்கள். இம்மாதிரியான எல்லா நிகழ்வுகளுக்கும் மத்தியில் ஆண்டவர் நம்மை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதை மனித இனம் புரிந்து கொள்ளவேண்டும். பாவத்தை சமாளிப்பது மட்டும் போதாது. ஆண்டவர் உன்னை எவ்வளவு நேசிக்கிறார் என்பதைக் கண்டுணர்ந்தால், அந்த தேவ அன்பு பாவத்தைச் சமாளிப்பது மட்டுமல்லாது. அவரது அன்பு மாற்றத்தையும் உண்டு பண்ணும்.

தேவ அன்பு நம் இருதயங்களில் ஊற்றப்படுகின்றது. ரோமர் 5:5: ''மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது''. பரிசுத்த ஆவியானவர் நம் இருதயத்தில் தேவ அன்பை ஊற்றுகிறார். அந்த அன்பானது ஆவியின் கனியாகும். நான் அவரது அன்பைப் பெற்றுக்கொண்டு, அவரது அன்புடன் மட்டும் இடைப்படும்போது ஆண்டவருடன் பரிமாற்றம் ஏற்படுகின்றது. அவருடைய



சுபாவம் எனக்குள்ளாக வருகின்றது. அதை நான் உணராவிட்டால் கூட அவரது சுபாவம் எனக்குள்ளாக வந்து, என்னுடன் தொடர்புகொண்டு உறவாட ஆரம்பிக்கின்றது. அந்த ஆண்டவரின் சுபாவம் பாவம் செய்வதில்லை.

**மாற்றம் ஏற்படுதல் : (எபேசியர் 2:2-6):**

1. அவைகளில் நீங்கள்முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்ற- படியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்ற- படியாகவும் நடந்து கொண்டீர்கள்.

2. அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின் படியே நடந்து, நமது மாம்சமும், மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

3. தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே.

4. அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப் பட்டீர்கள்.

5. கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக.

6. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழும்பி உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்''.

நீங்கள் எந்த வழியில் நடந்தீர்கள் என்பது முக்கியமல்ல. கடந்த காலங்களில் நாம் யாவருமே இந்த உலகப் பிரகாரமான வழிகளில் நடந்து வந்தோம். நாம் எல்லோருமே வான மண்டலத்தின் அதிபதியினால் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாகக் கட்டுப் படுத்தப்பட்டிருந்தோம். ''ஆனால் கிருபையிலும், கருணையிலும் மிகுந்த தன் ஐசுவரியத்தினால் ஆண்டவர் நம்மை நேசித்தார்''. (எபே 2:4): – ''தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே......''. அந்த அன்பினாலே மாற்றங்கள் உண்டாகின்றன, ஒவ்வொரு விசுவாசிக்கும் ஆண்டவருடைய அன்பு உண்டு. அந்த அன்பு நம்மை எவ்வளவாய் நேசித்தது என்பதைத் தெரிந்து கொள்ளும்போது, அதுவே நம்மை ஆண்டவருடைய இரட்சிப்புக்குள்ளாகக் கிருபையின் மூலம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான விசுவாசத்திற்குள் வழிநடத்துகின்றது. ஆண்டவர் நம் வாழ்வில் வருவதன் மூலம் அவரது அன்பும்,



குமாரனின் அன்பும், பரிசுத்த ஆவியானவரது அன்பும் நம் உள்ளார்ந்த மனிதனிலும், நமது.....அலை அலையான அன்பு அனுதினமும் நம் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அணுவழியாகவும் பாய்ந்து செல்லலாம். அது மனித உணர்ச்சி அல்ல, அது தேவனுடைய புனிதமான அன்பு ''நான் சரியான காரியங்களைச் செய்யவில்லை'' என்று நீங்கள் சொல்லலாம். உள்ளது உள்ளபடி அந்தத் தவறிழைத்த நிலையிலும் ஆண்டவரது அன்பை ஏற்றுக்கொள்ளுங்கள்.

''நான் ஆவிக்குரிய பிரகாரமாக எதையும் உணராதிருக்கிறேன்'' –அவரது அன்பை உங்களால் எதையும் உணர முடியாத நிலையிலும் ஏற்றுக்கொள்ளுங்கள். அவரது அன்பை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள். அது உங்களுக்குள் அன்பை மட்டுமல்லாது சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய யாவற்றையும் உண்டு பண்ணும்.

## இலகுவான அன்பின் நுகம் : (மத்தேயு 11:28 - 30)

வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில்

கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

''என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறதென்றார்'' — அவருடைய நுகம் எது என்று உங்களுக்குத் தெரியுமா? அதுதான் அன்பு. நான் அவருடைய நுகத்தை என்மேல் சுமக்கும்போது, நான் அவருடைய அன்பை மட்டுமே என்மேல் ஏற்றுக்கொள்கிறேன்.

(1 யோவான் 4:10,19) : (10) நான் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. (19) ''அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்''. அவருடைய நுகம் இலகுவாக இருப்பதில் ஆச்சரியமே இல்லை. அவரைப்பற்றி அறிந்து கொள்வதன் மூலம் என் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைப்பதில் ஆச்சரியமே இல்லை. பிதாவானவர் தம்முடைய அன்பில் நிலைத்திருக்கிறார்.

செப்பனியா 3:17: ''...... தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்''. நான் அவருடைய நுகத்தை எடுத்துக் கொள்ளுகிறேன். இயேசுவை நான் உள்ள நிலையிலேயே நேசிக்க அனுமதிக்கிறேன். அதன் பிறகு அவர் என்னில் அவருடைய வல்லமை காரணமாகவும், அன்பின் ஆழத்தின்



பரிமாணங்களின் காரணமாகவும், அன்பின் விசுவாசத்தின் காரணமாகவும், அன்பின் கிருபையின் காரணமாகவும், அந்த அன்பின் பிரசன்னத்தின் காரணமாகவும் என்னில் மாற்றங்களை உண்டு பண்ணுகிறார். கடைசியாக மாற்றங்கள் நிகழ்வதினால் நான் சுகமடைகின்றேன்.

## உன்னையே நீ நேசிக்க வேண்டும் :

ஆண்டவரது அன்பில் ஒரு ஒழுங்கு உள்ளது. நான் மற்றவர்களை நேசிப்பதற்கு முன் முதலாவது என்னை நேசிக்க வேண்டும். நான் என்னை நேசிக்காவிடில் ஆண்டவரை என்னால் நேசிக்க முடியாது. நான் ஆண்டவரை என்னை நேசிக்க அனுமதிக்க வேண்டும். இதுதான் நடக்க வேண்டிய வழி. முதலில் நான் ஆண்டவர் என்னை நேசிக்க அனுமதிக்க வேண்டும். இரண்மாவதாக நான் என்னையே நேசிக்க வேண்டும். மூன்றாவதாக நான் ஆண்டவரை நேசிக்க வேண்டும். கடைசியாக நான் யாவரையுமே - உங்களையும், ஒவ்வொருவரையும், ஏன்- நம் எதிரிகளைக்கூட சுதந்திரமாக நேசிக்க முடியும். நீ உன்னை நேசிக்கும் பொழுது, உனக்கு உன்னைக் குறித்ததான ஒரு புதிய சுயமதிப்பீடு, சுய விழிப்புணர்வு வருகின்றது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் பரிசுத்தப் படுத்தி விடுவதால், உனக்குள் ஒரு விசேஷித்த உணர்ந்து கொள்ளுதலும், ஆண்டவர் முன்னிலையில் நீதிமானாக்கப் பட்டுவிட்டதொரு உணர்வும் வருகின்றது. ஆண்டவருக்கும் உனக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும்

இல்லை. உனக்கும், மற்றவருக்கும் இடையிலும் எந்தப் பிரச்சினையும் இல்லை. நீயும் நேசிக்கப்படுவதுடன், பரிசுத்த ஆவியானவரது வல்லமையினால் உன்னாலும் மற்றவர் மேல் அன்பு செலுத்த முடியும். நான் இங்கு உணர்ச்சியைத் தூண்டுகிற காரியத்தையோ அல்லது இயற்கையான ஜென்ம சுபாவத்தையோ குறிப்பிடவில்லை. நான் இங்கு குறிப்பிடுவதெல்லாம் ஆண்டவர் நாம் பாவிகளாயிருக்கும் நிலையிலேயே நம்மேல் வைத்த அன்பையே. தாவீது, ''ஆண்டவருடைய இரக்கம் மிகப்பெரியது'' என்று கூறியதில் என்ன ஆச்சரியம்? (2 சாமு 24:14). ''அவருடைய இரக்கங்கள் மகா பெரியது''. பேதுரு அவரை, ''சகல கிருபையும் பொருந்தியவர்'' என்று கூறியதில் என்ன வியப்பு? (1 பேதுரு 5:10) பவுல் அவரை ''இரக்கங்களின் பிதாவும், சகல ஆறுதலின் தேவனும்'' என்று கூறுகின்றார். (2 கொரிந் 1:3).

''ஆபிரகாமே!'' என்று தேவன் அழைத்து, ''நீ என்னிடம் பதின்மூன்று வருடங்களாகப் பேசவில்லை, ஆனாலும் நான் உன்னை நேசிக்கிறேன்'' என்கிறார்.

''யாக்கோபே! - நீ பின் வாங்கிப் போய், என்னைவிட்டு விலகி இருபது வருடங்கள் ஆகின்றன. ஆயினும் நான் உன்னை நேசிக்கிறேன், உன்னைப் பயன்படுத்துவேன்'' என்கிறார் (ஆதி 32).



''கிதியோனே! நீ ஒளிந்து கொண்டுள்ளாய் - என்னால் பயன்படுத்தப் பட நீ விருப்பவில்லை. ஆனால் நீ உள்ள இடத்தில் உள்ளபடியே நான் உன்னை நேசிக்கிறேன். நான் உன் பயங்களை நீக்கிச் சமாதானப் படுத்தி, ஒரு வெற்றியைக் கொண்டு வருவேன்''.

''சிம்சோனே! நீ தெலிலாளுடன் சேர்ந்து தவறு செய்தாய்; ஆனால் நான் உன்னை நேசிக்கிறேன். இப்போது உன் வல்லமையைத் திரும்பப்பெற்றுக் கொண்டு, உன் சத்துருக்களை அழித்துவிடு'' என்றார். (நியாபாதிபதிகள் 16).

''பேதுருவே! நீ என்னை மறுதலித்து. அதே சமயம் என்னைச் சபிக்கவும் செய்தாய்! எல்லோர் மத்தியிலும் என்னை நிராகரித்தாய். ஆனாலும் நான் உன்னை நேசிக்கிறேன். இந்த மகாபெரிய சுவிசேஷத்தைத் திரளான ஜனங்கள் முன்பு, பரிசுத்த ஆவி உன் மேல் வந்திறங்கினபின் எல்லோருக்கும் அறிவிப்பாய்'' என்றார் (அப்போஸ்தலர் 1).

''பவுலே! நீ கிறிஸ்தவர்களைக் கொலைசெய்தாய். ஸ்தேவான் கல்லெறிபட்டபோது சாட்சியாகப் பார்த்துக்கொண்டிருந்தாய். ஆனாலும் நான் உன்னை நேசிக்கிறேன். உன்னை இரட்சித்தேன். உன்னையே மிகவல்லமையாகப் புறஜாதி மக்களின் மத்தியில் பயன்படுத்துவேன்'' என்றார் (அப்போஸ்தலர் 22:).

யோவான் 13:1:ல் வேதம் சொல்லுகிறது – ''அவர் அவர்களைக் கடைசி பரியந்தம் நேசித்தார்'' என்று. இது எதைக் குறிக்கின்றது? முடிவையா? இயேசு கிறிஸ்துவுக்கு சீஷர்கள் மேல் உள்ள அன்பை எதனாலும் மாற்ற முடியவில்லை. அவர்கள் பின்வாங்கிப் போனார்கள், மறுதலித்தார்கள், அவருக்கு அவர்கள் அத்தியாவசியத் தேவையாக இருந்தபோது அவரை நிராகரித்தார்கள். ஆனால் இவை யாவுமே அவரது அன்பை மாற்றவே இல்லை. அவர்களை அவர் முடிவு பரியந்தம் நேசித்தது போலவே உங்களையும் என்னையும் கூட நேசிப்பார்.

## முடிவுரை

பிலிப்பியர் 1:5: ''உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திட வருவாரென்று நம்பி ...'' – நீங்கள் பாவத்தில் சிக்கி இருந்தால் ஆண்டவர் உங்களை நீங்கள் உள்ள இடத்திலேயே, அந்த நிலையிலேயே நேசிக்க அனுமதியுங்கள், அது உங்களுக்குள் ஒரு பரிசுத்தமான மாற்றத்தைக் கொண்டுவரும். இதில் முக்கியமான விஷயம் - அவருடைய அன்புக்கு நாம் ஒப்புதல் கொடுப்பதுவே.

என் ஒரே நம்பிக்கையே இந்த வார்த்தைகள் யாவும் உங்களை ஊக்குவித்து, ஆண்டவர் உங்களை மேன்மேலும் நேசிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்பதே, என்னுடைய ஒரே விருப்பம். ஆண்டவர் அன்புள்ளவர், எல்லாவற்றையும்



மன்னிக்கின்றவர். நான் மன்னிக்கப்பட்டேன், நீங்களும் மன்னிக்கப்பட்டீர்கள். நாம் கழுவப்பட்டு, விசுவாசத்தினால் பரிசுத்தமாக்கப் பட்டோம். அவருடைய அன்பு மாறாது மேலும் அது நம்மை மாற்றுவதிலும் தோல்வியடையாது.

இதற்கும் அப்பால், அவருடைய அன்பு நம் மூலமாகவே மற்றவர்களை மாற்றுவதிலும் தோல்வியடையாது இது உலகிலேயே மிகப்பெரிய வல்லமையான சக்தி, எனவே அதை நாம் அனுமதிப்போம்.

## ஆண்டவர் உண்மையிலேயே உன்னைக் குறித்து விசாரிக்கிறார்.

இயேசு உன்னை மிக ஆழமாய் நேசிக்கிறார். எனினும் உண்மை என்னவென்றால், ''நாம் எல்லோரும் பாவம் செய்து, ஆண்டவரிடம் இருந்து பிரிக்கப்பட்டுள்ளோம்'' (ரோமர் 3:23; 6:23) இருந்தும், ஆண்டவர் உன்னில் அக்கறை உள்ளவராதலால் தன் அன்பை உன்னுடன் பகிர்ந்து கொள்வதற்காக ஒரு வழியை ஏற்படுத்தியுள்ளார். இயேசு கிறிஸ்துவே அவ்வழி.

இயேசு கிறிஸ்துவின் அன்பு மனுஷகுலத்திற்காக மிகப்பெரியதாக இருந்ததினால் எல்லா மனிதர்களுடைய பாவங்களுக்காகவும் சிலுவையில் மரித்தார். அவர் உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நீ நித்திய ஜீவனை அடையவேண்டும் என்பதற்காகத் தன் இரத்தத்தைச் சிந்தினார்.

அவரது அன்பிலும், அவரது சுபாவத்திலும் உள்ள எளிமையானதொரு விசுவாசத்தினால் அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஒன்றையே அவர் உன்னிடம் வேண்டுகிறார். ''ஆண்டவருடைய நாமத்தை எவரெல்லாம் கூப்பிடுகிறார்களோ அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்''. (அப்போஸ்தலர் 2:21:). நீங்கள் சொல்லவேண்டிய பிரார்த்தனை ''அன்புள்ள இயேசுவே! நான் ஒரு பாவி என்று அறிவேன். நான் உங்களை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு நித்திய ஜீவன் கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தாங்கள் மரணமடைந்த தங்களது அன்புக்காக நன்றி. ஆமென்''. என்ற பிரார்த்தனையை ஏறெடுங்கள்.

அவருடைய அன்பு முடிவடையாதிருக்கவும் அவர் நம்மை என்றும் கைவிடாமலும், விட்டு விலகாமலிருக்கவும் வாக்குத் தத்தம் செய்துள்ளார். (எபிரேயர் 13:5) நீங்கள் வேத வசனத்தை வாசித்தும், ஜெபித்தும் வேதத்தை விசுவாசிக்கும் நல்லதொரு சபையில் சேர்ந்து வாழ்வதின் மூலமாகவும் ஆண்டவருடன் உள்ள உறவை, ஐக்கியத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்.



## ஆண்டவர் உன்னை உண்மையிலேயே விசாரிக்கிறார்.

இயேசு உன்னை மிகவும் ஆழமாக நேசிக்கிறார். இருப்பினும், எல்லோரும் பாவம் செய்துள்ளோம், என்ற உண்மை நம்மை ஆண்டவரிடமிருந்து பிரித்து விடுகின்றது. (ரோமர் : 3:23; 6:23). இருந்தும் ஆண்டவர் உன்னை விசாரிப்பது மட்டுமல்லாமல், தன் அன்பை உன்னுடன் பகிர்ந்து கொள்ள ஒரு வழியும் ஏற்படுத்தியுள்ளார்.

இயேசுவின் அன்பு மனுக்குலத்துக்காக மிக உன்னதமாக இருந்ததால் அவர் வந்து, சிலுவையின் மேல் எல்லா மனிதர்களுடைய பாவங்களுக்காகவும் மரித்தார். அவர் உனக்கு நித்திய ஜீவன் கிடைக்கும் பொருட்டுத் தன் இரத்தத்தையே சிந்தினார்.

அவர் உன்னிடமிருந்து வேண்டும் ஒரே ஒரு காரியம், நீ அவரிடம் எளிமையான விசுவாசத்துடன் வந்து அவரது சுபாவத்தையும், உனக்காக உள்ள அவரது அன்பையும் நம்பி, அவரை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே. ''கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்'' - அப் : 2:21.

இந்த எளிய ஜெபத்தை ஏறெடுக்கவும்:-

''அன்புள்ள இயேசுவே! நான் ஒரு பாவி என்று அறிவேன். நான் தங்களை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறேன். எனக்கு நித்திய வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தாங்கள் சிலுவையில் மரித்ததற்காகவும், அந்த உங்களது அன்புக்காகவும் நன்றி! ஆமென்''.

எபி:13:5-ன் படி, ''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்று அவர் வாக்குத் தத்தம் பண்ணியுள்ளார். ஆண்டவருடைய வசனங்களைப் படிப்பதாலும், ஜெபத்தினாலும், நல்லதொரு விசுவாசிகளின் சபையில் சேர்வதாலும் ஆண்டவருடன் உங்களுக்கு உள்ள உறவை வளர்த்துக்கொள்ளுங்கள்.